தேதி.28.01.2026

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

O.S. No.212/2018 திரு. சம்பத்குமார் பி.வா.சா. 1

<u>பி.வா.சா.1: சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1–ம் பிரதிவாதி என்னுடைய மகன் என்றால் சரிதான். நான் தற்போது எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் கோட்டுவீராம்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். 1–ம் பிரதிவாதி எங்கு வசிக்கிறார் என்றால் வேலூரில் தங்கி வேலை செய்து வருகிறார். 1–ம் பிரதிவாதிக்கு எவ்வளவு சம்பளம் என்றால் மாதம் தோராயமாக ரூ.20,000/–ம் சம்பளம் பெற்று வருகிறார். நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும், அவர் மாதம் ரூ.50,000/–ம் சம்பளம் பெற்று வருகிறார் என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களான வா.சா.ஆ–1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்களில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் என்னுடையதும், 1–ம் பிரதிவாதியுடையதுமாகும். 1–ம் பிரதிவாதி உயர்கல்வி படிப்பதற்காக தான் இந்த கடன் வாங்கப்பட்டது என்றால் சரிதான். 21.01.2012 தேதியில் ரூ.3,20,000/–த்தை கடன் வசதி பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். எனக்கு எந்த துறையிலிருந்து எவ்வளவு மானியம் வந்தது என்றால் அரசாங்கத்திலிருந்து கல்விக்கடன் பெற்றதற்கான மானியம் வந்தது. நான் சொல்வது பொய் என்றும், அவ்வாறு அரசாங்கத்தால் எந்த மானியமும் வழங்கப்படுவதில்லை என்றால் சரியல்ல. அரசாங்கத்திலிருந்து நாங்கள் மானியம் பெற்றதற்கு ஏதேனும் கடிதமோ அல்லது ஆவணமோ கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. எதை அடிப்படையாக வைத்து மானியம் வந்ததாக சொல்கிறேன் என்றால் மக்கள் நீதிமன்றம்

நடந்த போது வங்கி மேலாளர் ஒரே தவணையில் முழு தொகையையும் செலுத்துவதாக இருந்தால் வட்டி தொகையை குறைத்து பெற்றுக்கொள்வதாக கூறியிருந்தார். மக்கள் நீதிமன்றத்தில் சொன்னவாறு நான் முழு தொகையையும் செலுத்தினேனா என்றால் இல்லை. மக்கள் நீதிமன்றம் எப்பொழுது நடந்தது என்றால் சுமார் 4 வருடங்கள் இருக்கும். அன்றைய தேதியிலிருந்து இன்று வரை ஏதேனும் தொகையை வங்கியில் செலுத்தினேனா என்றால் இல்லை. கடன் வாங்கியதிலிருந்தே இன்று வரை தொகை எதுவும் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. 1–ம் பிரதிவாதி படிக்கும் போது ரூ.20,000/– முதல் ரூ.30,000/– வரை செலுத்தியுள்ளேன். நான் அவ்வாறு எந்த பணமும் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. எனக்கும், 1–ம் பிரதிவாதிக்கும் வங்கியிலிருந்து வழக்கறிஞர் அறிவிப்பு வந்ததா என்றால் வந்தது. அதற்கு நான் பதில் அறிவிப்பு ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ–2 ஆவணம் 2022–ம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கான 1–ம் பிரதிவாதியின் சம்பள பட்டியல் என்றால் சரிதான், நான் இன்றைய தேதியிலுள்ள 1–ம் பிரதிவாதியின் சம்பள பட்டியலை தாக்கல் செய்யவில்லை என்றால் தற்போது 1–ம் பிரதிவாதி வேறு இடத்தில் வேலை செய்து வருகிறார். அதனால் எனக்கு அதுபற்றி தெரியாது. 1–ம் பிரதிவாதியின் படிப்பு எந்த வருடம் முடிந்தது என்றால் 2016–ம் வருடம் ஜூலை மாதம் முடிந்தது. 1–ம் பிரதிவாதியின் படிப்பு முடிந்ததற்கு ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.1 ஆன ஆவணம் எங்கிருந்து எவ்வாறு பெறப்பட்டது என்றால் மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவின்படி வாதி வங்கியால் என்னுடைய வழக்கறிஞருக்கு கொடுக்கப்பட்டது. அது

ஒரு இந்திய வங்கிகளின் கூட்டமைப்பு வகுத்துக் கொடுக்கப்பட்ட கல்விக்கடன் பெறுவதற்கான மாதிரி வழிகாட்டுதல் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதில் கல்விக்கடன் பெற்றால் அதை திருப்பி செலுத்துவது எப்படி என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நானும், 1–ம் பிரதிவாதியும் வங்கிக்கடனை திருப்பி செலுத்தாமல் இருப்பதற்காக வேண்டுமென்றே வங்கியை எமாற்ற வேண்டும் என்பதற்காகவும் கடனை கட்டாமல் நீண்ட காலமாக இழுத்தடித்து எதிர்வாதம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. நாங்கள் இந்த வழக்கை வேண்டுமென்றே இழுபறி செய்ததால் 3 வங்கி மேலாளர்கள் சாட்சி சொல்லி மாற்றல் செய்யப்பட்டு வங்கியின் அலுவலக நேரத்தை வீணடித்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் அதிகபட்ச செலவுதொகையுடன் இந்த வழக்கு வாதிக்கு ஆதரவாக தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.